யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 2022 உ.த | வணிகக்கல்வி

பெயர் / சுட்டெண் : ..... திரு.த.நிசாந்தன் BB.A (Hons)

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

அலகு 01 – வணிக அடிப்படைகளையும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவார்.

01. வணிகம் என்ற தொடரை வரையறுக்குக.
02. வர்த்தகம் என்றால் என்ன?
03. வியாபாரம் எனும் பதத்தினை வரையறுக்குக?
04. வியாபாரம், வர்த்தகம், வணிகம் ஆகிய எண்ணக்கருக்களுக்கிடையேயான தொடர்பினை விளக்குக?
05. பொருத்தமான உதாரணங்களுடன் தேவைகளையும் விருப்பங்களையும் ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுக?
06. பொருட்களுடன் ஒப்பிடுகின்ற போது சேவையொன்றில் காணப்படும் சிறப்பியல்புகளைத் தருக?
07. வணிகங்களில் காணப்படக்கூடிய பண்புகள் ஐந்து தருக?
08. வணிகமொன்று இடர்களை முகங்கொடுக்க நேரிடும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக?
09. வணிகமொன்றின் இரு பிரதான கருமங்களும் எவை?
10. வணிகத்தின் பரிணாம வளர்ச்சியிலான முக்கியமான கட்டங்கள் நான்கினையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?
11. துணைச் சேவைகள் நான்கினை குறிப்பிடுக?
12. வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படுகின்ற பல்வேறுபட்ட தேவைகள் யாவை?
13. கைத்தொழிற்புரட்சியின் விளைவாக வணிகத்தில் ஏற்பட்டுள்ள பிரதான மாற்றங்கள் எவை?
14. வணிகமொன்றினை வகைப்படுத்துவதற்கான அடிப்படைகள் (நியதிகள்) எவை?
15. உற்பத்தி சங்கிலி என்றால் என்ன?
16. முதலாம் நிலை உற்பத்தியின் கீழ் உள்ளடங்கும் கூறுகள் எவை?
17. வணிகமொன்றில் பயன்படுத்தப்படுகின்ற உள்ளீடுகள் (உற்பத்திக்காரணிகள்) எவை?
18. வணிகமொன்றில் அக்கறை செலுத்தும் தரப்பினர்கள் யாவர்?
19. வணிகமொன்றின் நோக்கங்கள் நான்கு தருக?
20. இலத்திரனியல் வணிகம் மற்றும் இலத்திரனியல் வர்த்தகம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக?
21. தற்காலத்தில் இலத்திரனியல் வணிகம் பிரபல்யமடைந்தமைக்கான காரணங்கள் எவை?
22. இன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் பல்வேறு நவீன போக்குகளை காஒக்கூடியதாக உள்ளது. அவ்வாறான புதிய போக்குகள் நான்கிளைக் குறிப்பிடுக?
23. அரசாங்கத்திடமிருந்து வணிகமொன்று எதிர்பார்க்கும் பங்களிப்புக்கள் எவை?

24. வணிகச்சூழலின் வகையினை பாய்ச்சற்கோட்டுப்படம் மூலம் தருக?
25. வணிகச்சூழலினை ஆய்வு செய்வதன் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக?
26. அகச்சூழல் காரணிகள் எவை?
27. வணிகமொன்றின் கிட்டிய சூழல் அல்லது அண்மிய சூழல் காரணிகள் யாவை?
28. வணிகத்தின் பேரண்ட சூழலின் பிரதான விசைகளைக் குறிப்பிடுக?
29. நிறுவனக்காலாசாரம் என்பதனை சுருக்கமாக விளக்கி இது நிறுவன நடிவடிக்கைகளில் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துமெனக் குறிப்பிடுக?
30. மக்கட்சூழலில் அடங்கும் விசைகளைக் குறிப்பிடுக?
31. பேரினச்சூழல் காரணிகளுக்கிடையிலான இடைத்தொடர்பினை உதாரணங்களுடன் குறிப்பிடுக?
32. சந்தை என்றால் என்ன?
33. சந்தை, சந்தை வெளி என்பவற்றுக்கிடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகளைக் குறிப்பிடுக?
34. பொருளியல் சூழலில் உள்ளடங்கும் காரணிகள் எவை?
35. ஏதேனம் உற்பத்தி வணிகமொன்றின் உள்ளீடு, வெளியீடு, மாற்றல் செயன்முறைகளை விபரமாக வரைபடம் ஒன்றைப் பயன்படுத்திக் காட்டுக?

***

www.lkedu.lk